உ

சிவமயம்.

திருமயிலைக் கபாலீசர் பதிகம்.

கற்பகவல்லியம்மைபதிகம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

41

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருமயிலைக்
கபாலீசர் பதிகம்.

காப்பு.

வெண்பா.

மண்டலத்தோர் சூழ்மயிலை வாழுங் கபாலீசர்
தண்டமிழ்ப்பாமாலைதனைச் சாற்றவே-அண்டம்பூத்
தாடுணைவ னேடுகரந் தாங்கிமகிழ் கூர்ந்திடுகூத்
தாடுமிளங் களிறேயாள்.

சொல்லரிய சதுர்மறையின் முடிவினின இணையடி கதிபுரியுமடியரினமா, நல்லவர்களுளமதனிநடனமிடுதெய்வமேநாதனேநாயடியனேனல்லல்களறக்கருணைபுரிகின்றநாளெநதநாளோ வருந்திலேன்சீர், மல்லல்வனமோங்குதிரு மயிலையம் பதியினித மருவுறு கபாலீசனே.

கூவிளநறுங்கொன்றை மாலைபுனை சங்கரா குவலயமெலாந்தருமுமா, தேவியொரு புடைமேவு தேவனே

சிறியனின் றிருவடி தொழாதபொல்லாப், பாவியெனி னுங் கடைகண் பார்த்திரட்சைசெய் பரமுனக்கே பங் கய, வாவிசூழ்ந் திலகுதிருமயிலை யம்பதியினித மருவுறு கபாலீசனே. (௩)

கஞ்சனெடு கண்ணனுங் காணவரி தாயமுக் கண் ணனே கடலில்வந்த, நஞ்சணிக ளாசுருதிநாயகாநாயி னேனுனிலங் தன்னினிதமுஞ், சஞ்சலப் படுதனின் ற ண்ணருட்கழ கோசதானந்தனே சம்புவே, மஞ்சளவு சோலைசூழ் திருமயிலையம்பதியின் மருவுறுகபாலீசனே.

மின்னுசெஞ் சடைதன்னி லரவமோ டறுகுமதி வேணியுமணிந்தவிமலா, என்னுடைய மனவிரு ளகற் றிநின்னதுதாளினைக்கன்பனுக்கியருள, இன்னுமெத்தனை நாள்கள் செல்லுமோ வரிகிலே னென்செய்வனெந்நா ளு, மன்னுதிரு மயிலையம் பதியினுறை யடியரக மருவு றுகபாலீசனே. (௪)

ஐயனேயெனக்கருள்செ யப்பனேயென்று நினதி ணையடிகடொழுபவர்வினை, நையவே யருள்செய்யு நாக பூஷணனே னுடர்கடுதிக்குமழுமான், கையனே கடைய னேன் கவலை தீர்த்தாள்வதெக்காலமோ வறிகிலேன்யா ன், வையமேத்தித் துதிசெய் திருமயிலையம் பதியின்ம ருவுறு கபாலீசனே. (௫)

பானனமொழியா ளுமையோர் பாகனே பரமனே பகவனே பாபஹரனே, ஞானசொரூ பாவடியர் நாடுபுனிதாசெய்ய நளினபாதாதற்பரா, யீனனெனையாளவுன் னுளமிரங்காவண்ண மேதெனக் குளவுபுகலாய், வானமளவியமாட மல்குதிரு மயிலையினின் மருவுறு கபாலீசனே. (௬)

பொங்குகடல்சூழுமிப் புடவிதனிலுழலுமென்புந்தியை மயக்கிடுமலக், கங்குலற நின்கருணை யெனுஞான வொளிதந்து காத்திடா விடிலடியனே, னெங்குசென்றுர்க்குரைப்பேனெனுட் குறையெலாமினியேனு நீக்கியருள்வாய், மங்குறவாழ்புன்னைவளர் திருமயிலையம்பதியின் மருவுறு கபாலீசனே (எ)

கறைமிடற்றண்ணலே கரைதிரையிலாதவுயர் கருணையங்கடலேபசுஞ், சிறையுடக்கலபவுருவா யம்மைபூசித்தசெல்வமேசிறியனேனுட், குறைகளைந்தாளற்குனுளமினுமிரங்காத கொள்கையேதோ வறிகிலேன், மறையவர்செய்மகநீடு திருமயிலையம்பதியின் மருவுறு கபாலீசனே (அ)

காரிகையர் காமவா ரிதிபடிந் தேறவொரு கரையறிகிலாதுழலுமிப், பூரியனினடியர்பணி விடைபுரிய வருள்செய பரிபூரண கமழ்கடுக்கைத், தாரிலகு மணி

மார்பனே சந்த்ரசேகர சதாசிவ பராமாதமும், மாரி பொழி திருமயிலை யம்பதியி லடியர்க மருவுறு கபாலீசனே. (௯)

அளவரிய லொருபரம்பொருளாகி நின்றிலகுமப்பனேவொப்பிலாயென், னுளமதனிலுறுதுயர்க ளூரைசெயவென் வசமலநி னுளமறியு மருள்புரிவையே, கோமளவும்மயோடொரு விடையிலடியர்துய ரகலவரும் வள்ளலே தெள்ளமுதமே, வளமைமிகு திருமயிலையம்பதியி லடியர்க மருவுறுகபாலீசனே. (ய)

திருச்சிற்றம்பலம்.

திருமயிலைக்கபாலீசர்பதிகம்

முற்றிற்று.

உ

சிவகாமிதுணை.

திருமயிலைக்கற்பகவல்லியம்மைபதிகம்.

காப்பு - வெண்பா.

காரூர்பொழின்மயிலைக் கற்பக ல்லிக்கன்பாய்ச்
சீரூர்பதிகம்யான் செப்பவருள்-நீரூரும்
கூத்தாடையாயளந்த கோபாலனூர்மருகா
கூத்தாடையானைமுகர் கூர்ந்து.

நூல்.

மேகநிகரானகுழ லழகும்விற் கணைபினுதல் விழியி னழகும்பசியசெம், பூகமொப்பாகுங்கழுத்தழகுமம்புயப் போதனைபவடியினழகுஞ், சோகமிக்கிழிஞர் குழுவிழை கடையனேனுளத் துயரறக்காண்பதென்றோ, மாகமளவி யசோலை மயிலைகபாலீசர்பான் மருவுகற்பகவல்லியே.()

பூசனைசெ யடியர்வினை பொடிபடுத் திடுமென்ன பூர ணி புராந்தகியுனை, நேசமுடனே துதித்துனது நாமங்க ளென்னெஞ்சிற் பதித்திவுலகப், பாசமதறக் கருணைகூர் சவுந்தரி பராசத்தி பார்வதி பகவதி, வாசவனோடமரர் துதி மயிலைக்கபாலீசர் மருவுகற்பகவல்லியே (௨)

பூதரவிலேந்து பரிபூரணி தயாபரிபுராதனிபவானி பொல்லா, வேதமுடையே நினது பாதமலரேத்தவர மீது கிருபையிலாவிடி லெனக்காதரவதேது புகலந்திரித் ரியம்பகி யகோரிபைரவி வராகி, மாதர்கண்டிக்கு மயி லைக்கபாலீசர் பான்மருவு கற்பகவல்லியே. (௩)

அண்டரண்டங்களுக்கோ ரன்னையேயென்ற நாவி யேயாரமுர்தமே, தண்டமிழ்ச்சொன்மாலை சாத்துவோ ர்க் கருளுந் தயாபரி புராணிகௌரி, விண்டையன்றெ ழுநளின சரணி சர்ப்பாபரணி விமலையென் வினைகளை

விலகுவாய், மண்டலந்துதிசெய்மயிலைக் கபாலீசர் பான்மருவு கற்பகவல்லியே. (௪)

பழுதினற்பத்தர்தம திதையமாகுஞ் செய்யபதும வாசனிபூதல, முழுதுமுன மிருநாழி நெற்கொண்டிரசித்தமுக்கனித்ரிசூலியினியெப், பொழிதினருள்கூர்ந்தெனது புன்கணறமாற்றுவாய் புங்கவீபுவனேஸ்வரீ மழுவலனிலங்கு மயிலைக் கபாலீசர் பான்மருவு கற்பகவல்லியே. (௫)

வீரியபி ராமிசிவ காமிகருணாகரிவிணாடர் கடுதிக்குமிகுசிங், காரி விசுவேஸ்வரி சுபாகரி குணாகரி கடாக்ஷவீக்ஷணி புனிதையோங், காரி யுபகாரி யொய்யாரிவரையரையனருள் சௌமாரியடிபெணியாள், வாரிபுடை நிலவுமயிலைக் கபாலீசர் பான்மருவு கற்பகவல்லியே. (சு)

சங்கரி சதானந்தி சுந்தரி சர்வேஸ்வரி சகஸ்த்ராபிதானிவாமி, சிங்கவாகனிநீலி யந்தரிதுரந்தரி திரோதை திரிபுரசுந்தரி, திங்களணி செஞ்சடில்தேவி பகவதிசச்சிதானந்தி யகிலஜனனீ, மங்களாகரியருள் செய்மயிலைக் கபாலீசர் மருவுகற்பகவல்லியே. (எ)

பரம்பரி சனர்த்தனர் சகோதரிசுகாரம்ப பர்வதேஸ்வரிசுபுத்திரி, ரந்தரி நிராதரி நீலகந்தரி நிமலேநித்திய

கல்யாணி நளினக், கரந்தனிற்கிள்ளையேந் தம்பிகை புரந்தரிகரர் சலாம்பரியானெனும், வரங்கடந்தருள்செய்மயிலைக்கபாலீசா பான்மருவு கற்பகவல்லியே. (அ)

சத்தியம்பிகையம்மை யயிராணிமலைசிவைசாமளையுருத்திரையுமை, பத்தியொடுதொழு மடியவர்க்கருளிமயவல்லி பரைபராசத்தி விமலை, நித்தியநிரஞ்சனி நிதாணிமரகதவல்லி நிர்குணி மனோன்மணிமலர், வத்திரயாமலையருள்செம் மயிலைக்கபாலீசர் மருவுகற்பகவல்லியே.

அம்புவியின்மைந்தர்பிழை யாயாமலாள்வது அன்னைதன்கடனுதலா, னம்பினே னுன்றனிரு நளினபொற்பாதமதை நாயினுங்கடையனேன்யா, னெம்பிரா னரனுர்த மிடமேவுமன்னையே யேங்கிடாதெனையாளுவாய்,வம்பவிழ்மலர்ச்சோலை மயிலைக் கபாலீசர் மருவு கற்பகவல்லியே. (௰)

தேவிசகாயம்.

திருமயிலைக்கற்பகவல்லியம்மைபதிகம்

முற்றிற்று.

———